## 1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

முன்னிலை : **திருமதி.S.பொன் மெலிசா B.A., LL.B.,**

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருநெல்வேலி

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.4/2024 அதன் அ.வ.எண்.5/2024**

அன்சார் ... மனுதாரர் /வாதி

–எதிர்–

1) ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி
கவுன்சில், திருநெல்வேலி.
2) வாவு செய்யது அப்துர் ரகுமான்
3) Y.M.I. வாஜீஹா பேகம்
4) W.S.A.R. கதீஜாதுல் பாத்திமா
5) வாவு அகமது இசாக் ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பாக 11.09.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.B.கமலநாதன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.மகாராஜன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினர்களாக உள்ள நிலையிலும், இரு தரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

### உத்தரவு

இம்மனுவானது, மனுவில் கண்டுள்ளபடி அசல் வழக்கின் பிராதை சீர்திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிடக் கோரி மனுதாரரால் கட்டளை 6 விதி 17 & 18 மற்றும் 151 சி.பி.சி.ன் பிரகாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–**

அசல் வழக்கு நிலுவையில் உள்ள போது, 1ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு எந்தவித அறிவிப்பும் கொடுக்காமல் தபசில் சொத்தினை சீல் வைத்துவிட்டார்.

எனவே, மேற்படி சீலினை அகற்றக் கோரி அசல் வழக்கில் பரிகாரம் கோர வேண்டியது அவசியமாகும். இம்மனுவினை அனுமதிப்பதினால் அசல் வழக்கின் தன்மை எதுவும் மாறாது. எனவே, மனுவில் கண்டுள்ளபடி அசல் வழக்கின் பிராதை சீர்திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிடக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. 1ம் எதிர்மனுதாரர் மாநகராட்சி சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு மனுதாரர் மீது நடவடிக்கை எடுத்து விதிமுறைகளுக்கு மாறாக மாநகராட்சியின் அனுமதி பெறாமல் கட்டிய கட்டிடங்களுக்கு சீல் வைக்க 1ம் எதிர்மனுதாரருக்கு சட்டப்படி உரிமை உள்ளது. மேற்படி சீல் வைத்ததை அகற்ற மனுதாரர் இந்நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேட இயலாது. எனவே, இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) **<u>இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் கோரியவாறு அசல் வழக்கின் பிராதினை சீர்திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

5) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியம் எதுவும் இல்லை. சான்று ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>தீர்வு</u>:–**

7) மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கு நிலுவையில் உள்ள போது, 1ம்

எதிர்மனுதாரர், மனுதாரருக்கு எந்தவித அறிவிப்பும் கொடுக்காமல் தபசில் சொத்தினை சீல் வைத்துவிட்டதாகவும், எனவே, மேற்படி சீலினை அகற்ற செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கினை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்று கட்சி செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் அவ்வாறு தபசில் சொத்தினை சீல் வைக்கவில்லை என்று கட்சி செய்யவில்லை. மாறாக மாநகராட்சி சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு மனுதாரர் மீது நடவடிக்கை எடுத்து விதிமுறைகளுக்கு மாறாக மாநகராட்சியின் அனுமதி பெறாமல் கட்டிய கட்டிடங்களுக்கு சீல் வைக்க 1ம் எதிர்மனுதாரருக்கு சட்டப்படி உரிமை உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. எனவே, தபசில் சொத்திற்கு 1ம் எதிர்மனுதாரரால் சீல் வைக்கப்பட்டது என்பதை, 1ம் எதிர்மனுதாரர் ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில், மேற்படி சீல் வைத்ததை அகற்றக்கோரி செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் இந்நீதிமன்றத்தில் பரிகாரம் கோர இயலாது என்று கட்சி செய்யப்பட்டுள்ளது. மேற்படி செயல் உறுத்துக்கட்டளை பரிகாரத்தை விசாரிக்க இந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளதா, இல்லையா என்பதை இம்மனுவில் தீர்மானிக்க இயலாது.

8) அசல் வழக்கில் 1ம் எதிர்மனுதாரரோ அவரது வகையாட்களை நோட்டீஸ் எண்.TP1/3353/2023 தேதி 30.11.2023 ன் படி வாதிக்கு எதிராக தபசில் சொத்தில் சீல் வைக்கக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரப்பட்டுள்ளது. இந்நிலையில், தபசில் சொத்திற்கு 1ம் எதிர்மனுதாரரால் சீல் வைக்கப்பட்டுள்ளது. எனவே, அசல் வழக்கில் மனுதாரருக்கு சாதகமாக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டாலும் கூட மனுதாரரால் தீர்ப்பின் பலனை அனுபவிக்க இயலாது. மேலும், மனுதாரர் கோரியவாறு செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கினை சீர்திருத்தம் செய்வதால், அதனை நிரூபிக்க வேண்டிய கடமை வாதியையே சாரும். அதனால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித ஈடு செய்ய முடியாத இழப்பும் ஏற்படபோவதில்லை. மனுதாரர் கூறியுள்ளபடி பிராதினை

சீர்திருத்தம் செய்வதினால், வழக்கில் புதிதாக வழக்குமூலம் எதுவும் ஏற்படபோவதில்லை. புதிதாக எந்தவித சொத்துக்களும் வழக்கில் சேர்க்கப்படவில்லை. மேலும் வழக்கின் தன்மை எதுவும் மாறப்போவதில்லை. மேலும் மேற்படி சீர்திருத்தங்கள் மூலம் மனுதாரர் பிராதில் கூறியுள்ள சங்கதிகள் எதையும் மறுத்து கட்சி செய்யவில்லை. எனவே, அசல் வழக்கின் சரியான தீர்வு காணவும், வழக்கின் பெருக்கத்தை தடுக்கவும், நீதியின் பால் நலன் கருதியும் இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9) முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PON MELISA S
Uploaded on 18.09.2025
Digitally signed by PON MELISA S
Date: 2025.09.18 15:37:35 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை

PON MELISA S
Uploaded on 18.09.2025
Digitally signed by PON MELISA S
Date: 2025.09.18 15:37:41 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>இ.ம.எண்.4/2024 அதன்</u>**
**<u>அ.வ.எண்.5/2024</u>**

சீரான / வரைவு – உத்தரவு
18.09.2025